**ஜனவரி – 18**

# TNPSC துளிகள்

- 20வது டாக்கா சர்வதேசத் திரைப்பட விழாவானது வங்காள தேசத்தின் டாக்கா நகரில் தொடங்கியது.
    - இந்த விழாவின் போது, ‘திரைத்துரையில் பெண்கள்’ என்ற சர்வதேச மாநாட்டின் 8வது பதிப்பும், ‘வெஸ்ட் மீட்ஸ் ஈஸ்ட்’ (கிழக்கைச் சந்திக்கும் மேற்கு) திரைக்கதை ஆய்வகத்தின் 4வது பதிப்பும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.
- இலங்கையில் வெகுவாகக் குறைந்துள்ள அந்நியச் செலாவணி இருப்புகள் மற்றும் உணவு இறக்குமதிக்கு உதவுவதற்காக 900 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான நிதி உதவியை இலங்கைக்கு வழங்குவதாக இந்தியா அறிவித்துள்ளது.
    - இந்திய ரிசர்வ் வங்கியின் மூலம் இந்தியா தனது உதவியை வழங்குகிறது.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது சமீபத்தில் தனி மகளிர் காவல் படைப் பிரிவு என்ற ஒரு படைப் பிரிவினை உருவாக்கியுள்ளது.
    - இந்த மகளிர் காவல் படையினர், மகிளா காவல் சின்னம் என்ற ஒரு சிறப்பான தனிப்பட்டச் சின்னத்தை அணிவார்கள்.
- பிரதான் மந்திரி ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்திற்கு ரூ.3,000 கோடியை மத்திய அரசு வழங்கும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
    - இது சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் சுகாதார ஆராய்ச்சி ஆகிய துறைகளில், குறிப்பாக மாவட்ட அளவிலான குறைகளை நிவர்த்தி செய்வதற்காக வழங்கப் படுவதாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு அரசு விருதுகள்

- மூத்தக் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவருமான குமரி அனந்தனை (88) 2021 ஆம் ஆண்டிற்கான பெருந்தலைவர் காமராஜர் விருதிற்கு மாநில அரசு தேர்வு செய்துள்ளது.
- அகில இந்திய தமிழ்ச் சங்க பேரவையின் தலைவர் மீனாட்சிசுந்தரம் (78) திருவள்ளுவர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2009 ஆம் ஆண்டு பெங்களூருவில் திருவள்ளுவர் சிலையை நிறுவுவதற்கு முன்னாள் முதல்வர் கருணாநிதியால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் இவர் முக்கியப் பங்கு வகித்தவர் ஆவார்.

# தேசியச் செய்திகள்

## ஒளிபரப்புப் பார்வையாளர்கள் ஆராய்ச்சிச் சபை செய்தி ஊடக மதிப்பீடுகள்

- தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது "செய்தி ஊடக மதிப்பீடுகளை" மீண்டும் தொடங்குமாறு ஒளிபரப்புப் பார்வையாளர்கள் ஆராய்ச்சிச் சபையிடம் கூறியுள்ளது.
- செய்தி ஊடகங்களினுடைய பார்வையாளர்களின் விவரங்களை வெளியிடுமாறும், அவற்றினுடைய கடந்த மூன்று மாதகாலத் தரவுகளை மாதாந்திர வடிவ ஆவணமாக

வெளியிடுமாறும் அமைச்சகம் கூறியுள்ளது.

- ஒளிபரப்புப் பார்வையாளர்கள் ஆராய்ச்சிச் சபையானது அதன் செயல்முறைகள், மேற்பார்வை வழிமுறைகள் மற்றும் நெறிமுறைகளைத் திருத்தி அமைத்துள்ளது.
- இந்திய ஒளிபரப்புப் பார்வையாளர்கள் ஆராய்ச்சிச் சபை என்பது ஒரு கூட்டுத் தொழில் அமைப்பாகும்.
- இது இந்திய ஒளிபரப்பு நிறுவனங்கள், விளம்பரம் மற்றும் ஊடக நிறுவனங்கள் மற்றும் விளம்பரதார நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு நிறுவப்பட்டது.
- இது உலக அளவிலான ஒரு மிகப்பெரிய தொலைக்காட்சி மதிப்பீட்டு அறிவியல் துறை அமைப்பாகும்.

## Paytm பணவழங்கீட்டு வங்கி

- இது இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்நது வரும் ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகத்தின் பயன் பெறும் வங்கியாக மாறியது.
- ஒரே மாதத்தில் 926 மில்லியனுக்கும் அதிகமான ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகப் பரிவர்த்தனைகளை எட்டிய நாட்டின் முதல் பயனாளி வங்கி இதுவாகும்.
- இந்தியத் தேசிய பணவழங்கீட்டுக் கழகம் வெளியிட்ட தரவுகளின்படி, பாரத் ஸ்டேட் வங்கியானது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அதிக பணம் அனுப்பும் வங்கி குறித்த தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- பயனாளி வங்கிகள் (Beneficiary banks) என்பது பணம் பெறும் கணக்காளர்களைக் கொண்டுள்ள வங்கிகள் ஆகும்.

## இந்தியக் கல்வி தொழில்நுட்பக் கூட்டமைப்பு

- இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனங்கள் இணைந்து இந்தியக் கல்வி தொழில்

நுட்பக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

- ❖ இது இந்தியக் கைபேசி இணையச் சேவைச் சங்கத்தின் ஒரு வழிகாட்டுதலின் கீழ் உருவாக்கப் பட்டது.
- ❖ இது பெரும்பாலும் 1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான நிறுவனங்களால் உருவாக்கப் பட்டது.
- ❖ இந்தக் கூட்டமைப்பில் Unacademy, BYJU, upgrad, Lead School மற்றும் Vedantu ஆகியவை அடங்கும்.
- ❖ அடிப்படையில் இந்தக் கூட்டமைப்பு தனது சுய ஒழுங்குமுறையை உருவாக்குகிறது.
- ❖ இந்தத் துறையின் செயல்பாட்டுக் கோட்பாடுகள் அல்லது விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளில் அரசாங்கத்தின் தலையீட்டைக் குறைக்க இது செய்யப்படுகிறது.
- ❖ கல்வித் தொழில்நுட்ப நிறுவனம் என்பது கல்வி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஒரு நிறுவனமாகும்.


IAMAI
Internet And Mobile Association Of India

### குடிமக்களிடையே அரசியலமைப்பு குறித்த எழுத்தறிவுப் பிரச்சாரம்

- ❖ இது கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் தொடங்கப் பட்டது.
- ❖ இது நாட்டிலேயே இது போன்ற முதல் வகைப் பிரச்சாரம் ஆகும்.
- ❖ இந்தப் பிரச்சாரமானது அந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு அரசியலமைப்பின் அடிப்படைகள் பற்றி கற்பிக்கும்.
- ❖ இந்தப் பிரச்சாரம் என்பது கொல்லம் மாவட்டத்தை அரசியலமைப்பு சார்ந்த ஒரு கல்வியறிவு பெற்ற மாவட்டமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### பாகிஸ்தானின் தேசியப் பாதுகாப்புக் கொள்கை



- பாகிஸ்தான் தனது முதல் தேசியப் பாதுகாப்புக் கொள்கையை அறிமுகப் படுத்தியது.
- "பாகிஸ்தானின் பிராந்திய ஒருமைப்பாட்டை எந்த ஒரு சூழ்நிலையிலும் பாதுகாக்கச் செய்வதே" இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.
- இந்தக் கொள்கையின்படி, தெற்காசியாவின் பாதுகாப்பு மதிப்பீட்டில் அணுசக்தித் தடுப்பு ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது.

## பெருந்தொற்றுக் காலத்தின் கோடீஸ்வரர்கள் (Pandemic Billionaires)

- ஆக்ஸ்பாம் அமைப்பானது சமீபத்தில் "பெருந்தொற்றுக் காலத்தின் கோடீஸ்வரர்கள்" என்பது பற்றிய தனது அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, கோவிட் தொற்றுநோயானது கோடிக் கணக்கானவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்ததோடு மட்டுமல்லாமல், சில புதிய கோடீஸ்வரர்களையும் உருவாக்கியுள்ளது.
- கோவிட்-19 தொற்றுநோய்க் காலத்தின் போது ஆசிய மக்கள் தங்கள் செல்வப் பெருக்கத்தைக் கண்டனர்.
- இவர்கள் பெரும்பாலும் மருந்துத் துறையை சார்ந்தவர்கள் ஆவர்.
- ஆசியாவின் ஏழ்மையான 90 சதவீதத்தினருடன் ஒப்பிடுகையில், 1 சதவீதப் பணக் காரர்கள் அதிக செல்வத்தை வைத்துள்ளனர்.

Oxfam International

## கண்ணீரில்லா வெங்காயம்





- கண்ணீரில்லா வெங்காயம் என்பது "சன்யன்ஸ்" (Sunions) என்று அழைக்கப்படுகிறது.
- இந்த வெங்காய வகையானது நெடித் தன்மைக் குறைவான வெங்காய வகைகளை குறுக்கு இனப்பெருக்கம் செய்வதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்டது.
- சன்யன்ஸ் வகை வெங்காயங்கள் இனிப்பு வெங்காயங்கள் ஆகும்.
- ஐக்கிய ராஜ்யத்தில் விற்கப்படும் இந்த வெங்காய வகையானது அமெரிக்காவில்

விளைவிக்கப் படுகிறது.


### டோங்காவில் எரிமலை வெடிப்பு - ஹங்கா டோங்கா ஹங்கா ஹாஅபாய் எரிமலை

- தென் பசிபிக் தீவு நாடான டோங்காவில் நீருக்கடியில் அமைந்த பெரிய எரிமலை வெடித்துள்ளது.
- இந்த நிகழ்வானது பசிபிக் கடற்கரைப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கையை விடுக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது.
- ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிஜி, ரஷ்யா, சிலி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### வித்தியாசமான புதிய உலோகம் கண்டுபிடிப்பு




- அறிவியலாளர்கள் சமீபத்தில் ஒரு புதிய உலோகக் குழுவைக் கண்டுபிடித்துள்ளனர்.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த உலோகக் குழுவானது "விசித்திரமான புதிய


உலோகங்களின் குழு" (New Strange group of metals) என்று அழைக்கப்படுகிறது.

- ❖ இந்தப் புதிய உலோகக் குழுவின் பண்புகள் இன்னும் புரிந்து கொள்ளப் படவில்லை.
- ❖ இந்த விசித்திரமான உலோகங்கள் ஃபெர்மி அல்லாத திரவங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன.
- ❖ இவை உலோகங்களின் மரபு விதிகளைப் பின்பற்றுவதில்லை.
- ❖ இவற்றின் பண்பானது, முதன்முதலில் குப்ரேட்டுகளில் (cuprates), அதாவது காப்பர் ஆக்சைடுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ இந்த குப்ரேட்டுகள் உயர் வெப்பநிலை மீக்கடத்திகள் ஆகும்.
- ❖ இந்த உலோகங்கள் உலோகங்களின் மின் கடத்துத் திறனைக் கொண்டிருப்பதில்லை.

# விளையாட்டுச் செய்திகள்

## விராட் கோலி

- ❖ இந்திய டெஸ்ட் போட்டிக்கான அணியின் தலைவர் பதவியில் இருந்து விராட் கோலி விலகியுள்ளார்.
- ❖ சமீபத்திய இந்த முடிவால், அவர் இந்திய கிரிக்கெட் அணியின் அனைத்து விதமான தலைவர் பதவியிலும் இருந்து விலகி உள்ளார்.
- ❖ 68 டெஸ்ட் போட்டிகளில் 40 வெற்றிகளுடன், வெற்றிகரமான இந்திய டெஸ்ட் அணித் தலைவர் என்ற பெருமையுடன் விராட் கோலி தனது தலைவர் பதவியில் இருந்து விலகி உள்ளார்.
- ❖ இந்தப் பட்டியலில் தோனி (60 போட்டிகளில் 27 வெற்றிகளுடன்), கங்குலி (49 போட்டிகளில் 21 வெற்றிகளுடன்) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.




| CAPTAIN | MATCHES | WINS | LOSSES | DRAWS | W/L |
|---|---|---|---|---|---|
| Graeme Smith | 109 | 53 | 29 | 27 | 1.827 |
| Ricky Ponting | 77 | 48 | 16 | 13 | 3 |
| Steve Waugh | 57 | 41 | 9 | 7 | 4.555 |
| Virat Kohli | 68 | 40 | 17 | 11 | 2.352 |
| Clive Lloyd | 74 | 36 | 12 | 26 | 3 |

# முக்கிய தினங்கள்

## தேசியப் புத்தாக்க நிறுவன நாள் - ஜனவரி 16

- ❖ பிரதமர் மோடி ஜனவரி 16 ஆம் தேதியை 'தேசியப் புத்தாக்க நிறுவன தினமாக'

அறிவித்தார்.

- இந்தியாவில் இத்தினம் கொண்டாடப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்திய நாடானது, 2022 ஆம் ஆண்டு ஜனவரி 10 முதல் ஜனவரி 16 வரையில் தொடங்கி ஸ்டார்ட்-அப் இந்தியா புத்தாக்க வாரத்தைக் கொண்டாடுகிறது.
- தொழில் மற்றும் தொழில்துறை வர்த்தக ஊக்குவிப்புத் துறையால், இந்த வார அளவிலான கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், தேசியப் புத்தாக்க நிறுவன தினமானது ஆறு கருத்துருக்களில் கொண்டாடப் படுகிறது.
- அவை நிலையான வளர்ச்சி, எதிர்காலத்தின் தொழில்நுட்பம், உள்ளூர் முதல் உலகளவு வரை, உற்பத்தியில் ஜாம்பவான்களை உருவாக்குதல், டிஎன்ஏவைத் தூண்டச் செய்தல் மற்றும் கடைமட்டப் பகுதியில் இருந்து உருவாதல் ஆகியவை ஆகும்.

**‘National Start-up Day’ to be celebrated on January 16: PM Modi calls start-ups backbone of new India**



## இந்திய உணவுக் கழகத்தின் (FCI) 58வது நிறுவன தினம்

भारतीय खाद्य निगम

Food Corporation of India

- இது 1964 ஆம் ஆண்டு உணவுக் கழகச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப் பூர்வ அமைப்பாகும்.
- 1965 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி அன்று அந்தக் கழகத்தின் முதல் மாவட்ட அலுவலகம் தஞ்சாவூரில் அமைக்கப்பட்டது.
- இது நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகத்தின் உரிமத்தின் கீழ் செயல்படுகிறது.
- இந்தத் தினத்தன்று, உணவுத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், “இந்திய உணவுக்

கழகத்திற்கான 5 அம்ச சீர்திருத்தச் செயல்பாட்டு  நிரலை" வெளியிட்டார்.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆